1984 பிப்ரவரி 15]

துரைமுருகன், சி. பழனிமுத்து, ஏ. சி. சண்முகம், எஸ். ஜகத்ரட்சகன், கே. பாலசுப்பிரமணியன், டாக்டர் கே. பி. இராமலிங்கம் ஆகியோரின் பதவிக் காலம் 1984 பிப்ரவரி மாதம் 5–ம் தேதியன்று முடிவடைந்துவிட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20–2–1984 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 21-2-1984 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 22-2-1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி 1-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை ந்தப் பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பேனல் ஆஃப் சேர்மென்) நான் நியமிக்கிறேன்.

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.